# சென்னையில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்

## கை தட்டி, விசில் அடித்து பொதுமக்கள் ஆரவாரம்



■ சென்னை கோயம்பேடு – கே.கே.நகர் வரை, மேம்பால ரயில் பாதையில், மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நேற்று நடத்தினர்.

சென்னை, பிப். 15–

கோயம்பேடு – அசோக் நகர் – கே.கே.நகர் நிலையங்கள் இடையே, நேற்று மெட்ரோ ரயில் சோதனை வெள்ளோட்டம் நடந்த போது, அந்த பகுதிவாசிகள், கைதட்டி, விசில் அடித்து, ஆரவாரம் செய்தனர்.

**5.5 கி.மீ.,**

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், கடந்த ஜன., 30ம் தேதி கோயம்பேடு யார்டில், மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடந்தது.

தற்போது, கோயம்பேடு – ஈக்காடுத் தாங்கல் இடையே, மெட்ரோ ரயில் பாதை மற்றும் மின் மயமாக்கும் பணிகள் முடிந்ததை அடுத்து, கோயம்பேடு – அசோக்நகர் – கே.கே.நகர் மெட்ரோ ரயில் நிலையங்கள் இடையே, 5.5 கி.மீ., துாரம், நான்கு பெட்டிகள் இணைக்கப் பட்ட மெட்ரோ ரயில் சோதனை வெள்ளோட்டம் நேற்று நடத்தப்பட்டது.

நேற்று பகல், 12:20 மணிக்கு, கோயம்பேடு யார்டிலிருந்து புறப்பட்டு, கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையம் வழியாக, 12:50 மணிக்கு, அசோக்நகர் – கே.கே.நகர் மெட்ரோ ரயில் நிலையம் சென்றடைந்தது. அங்கிருந்து, 12:55 மணிக்கு புறப்பட்டு, 1:15 மணிக்கு கோயம்பேடு சென்றடைந்தது.

**இந்த ஆண்டுக்குள்...**

கோயம்பேடு–கே.கே.நகர் இடையே, மெட்ரோ ரயில் இருவழிப்பாதை பணிகள் முடிந்திருந்தாலும், நேற்று இந்த ரயில், ஒரு பாதையில் மட்டும், இருவழி மார்க்கத்திலும் இயக்கப்பட்டது.

கோயம்பேட்டில் இருந்து, 10 கி.மீ., வேகத்தில் இயக்கப்பட்ட இந்த ரயில், கே.கே.நகரில் இருந்து கோயம்பேட்டிற்கு இயக்கப்பட்டபோது, 30 முதல், 40 கி.மீ., வேகத்தில் இயக்கப்பட்டது. இந்த சோதனை ஓட்டம், நேற்று, மூன்று முறை நடத்தப்பட்டதால், அந்த பகுதிவாசிகள், அடுக்குமாடி கட்டடங்கள் மீதிருந்து பார்த்து, கைதட்டி, விசிலடித்து ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் போக்கு வரத்து பிரிவு அதிகாரி கூறுகையில், ''கோயம்பேடு – கே.கே.நகர் இடையே உள்ள நிலையங்களின் கட்டுமான பணிகள் தாமதமாவதால், புதிய ஒப்பந்ததாரர் நியமிக்கப்பட உள்ளார். இந்த ஆண்டு இறுதிக்குள், கோயம் பேடு – பரங்கிமலை இடையே, மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளது,'' என்றார்.